24th January 1961]

Labourers

* 126 *Q.*—**SRI P. G. MANICKAM :** *கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) 1959, 1960-ஆம் வருஷங்களில், மலேயா நாட்டிலிருந்து இந்தியாவுக்குப் திருப்பி அனுப்பப்பட்ட தமிழ் தொழிலாளர்கள் எத்தனை பேர்?

(இ) இவர்களுக்கு அரசாங்கம் மூலமாக என்னென்ன உதவிகள் அளிக்கப்பட்டன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) There is no classification as " Tamilian Labourers arrived from Malaya " in the registers maintained in the Madras Harbour and in the Emigration office. The following are the number of persons disembarked at Madras Harbour and Nagapattinam Port from Malaya during the years 1959 and 1960 :—

Year.	*Place of disembarcation.*	*Men.*	*Women.*	*Children.*	*Total.*
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1959	**Madras Harbour**	**371**	252	308	**931**
	Nagapattinam Port	348	..	..	**348**
1960	**Madras Harbour (up to June).**	77	56	72	**205**
	Nagappattinam Port (up to 9th September 1960).	**145**	..	..	**145**

(*b*) Collectors of districts have reported that they have not been approached for relief by any repatriates from Malaya during 1959 and 1960. The Government have also not received any reports from Collectors so far indicating the need for rehabilitating these repatriates. The question of giving them assistance does not therefore arise.

SRI P. G. MANICKAM : *மலேயாவிலிருந்து நம் சென்னைக்கு வந்தவர்களில் யாருமே உதவி கோரி சர்க்காருக்கு விண்ணப்பம் அனுப்பவில்லையா? அப்படி அனுப்பியிருப்பின் அவர்களுக்கு உதவி செய்ய சர்க்காரிடத்தில் ஏதாவது திட்டம் இருக்கிறதா?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : *நான் முன்பே விடை அளித்தேன். இதைப்பற்றி கலெக்டரை விசாரித்தபோது, இம்மாதிரி யாரிடமிருந்தும் உதவி கோரப்படவில்லை என்று கலெக்டரிடமிருந்து தகவல் வந்தது. மலேயாவிலிருந்து யாரும் நிர்ப்பந்தத்தின் பேரில் இங்கு வரவில்லை, அவர்களாகவே தான் வந்தார்கள். ஏனென்றால் அந்த நாட்டில் சிடிசன்ஷிப் அளிப்பதில் தொந்திரவு ஒன்றும் கிடையாது. அவர்கள் தாய் நாட்டிற்கு வரவேண்டுமென்று வந்தார்களே தவிர, அவர்கள் நிர்ப்பந்தத்தின் பேரில் வரவில்லை.*

[24th January 1961

SRI A. VEDARATHNAM : இவர்கள் உதவி கோரி ஏதாவது விண்ணப்பம் வந்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவர்கள் உதவி கோரியதாக தகவல் ஒன்றும் இல்லை.

SRI S. M. ANNAMALAI : கேட்பவர்களுக்குக்கெல்லாம் பிரஜா உரிமை தரப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஐம்பத்தைந்து வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு அந்த இடத்தில் "சிடிசன்ஷிப்" கொடுப்பதில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அது குறித்து இந்த சர்க்கார் எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுபற்றி என்னிடம் தகவலில்லை.

Strike

* 127 *Q.*—SRI K. R. NALLASIVAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சமீபத்தில் குந்தாப் பகுதியில் நடைபெற்ற வேலை நிறுத்தம் காரணமாக சிறைத் தண்டனை பெற்ற ஊழியர்கள் எவ்வளவு பேர் ?

(இ) அவர்களுக்குச் சிறைத் தண்டனை முடிந்தபின் மீண்டும் வேலையளிக்க உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Sixty-nine persons were convicted and sentenced to various terms of imprisonment.

(*b*) The question is under the consideration of Government.

Office hours

* 128 *Q.*—SRI N. K. PALANISAMI and SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to revise the working hours of the offices as 11 a.m. to 5-30 p.m. instead of 10-30 a.m. to 5 p.m. ?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI N. K. PALANISAMI : சென்னை செகரட்டேரியட் என்.ஜி.ஓ. சங்கம், மாகாண என்.ஜி.ஓ.-க்கள் சங்கம் இவை நான்கைந்து மாதங்களுக்கு முன்பாக இம்மாதிரி 10½ மணி என்பதற்கு பதிலாக 11 மணியிலிருந்து 5½ மணிவரை என்று வேலை செய்யும் நேரத்தை மாற்றவேண்டுமென்று சொன்னதற்கு,